Ulundurpet—Salem road

* 243 *Q.*—THIRU N. DENNIS: Will the Hon. the Minister for Public Works be pleased to state—

(a) whether the contractors of the widening of roads of the Ulundurpet—Salem road between 74 to 86 K.M. have surrendered their contract during 1971 January;

(*b*) whether the surrender has been accepted; and

(*c*) if so, the details thereof ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : (அ) முதல் (உ) வரை இவ்வேலையை ஏற்றுக்கொண்ட ஒப்பந்தக்காரர் தேர்தலில் போட்டியிட்டதால் அவருடைய விருப்பப்படி அவர் ஒப்பந்தம் முடிக்கப்பட்டு, அவர் டிபாசிட் தொகையை இழந்தார், மறு ஒப் பந்தப் புள்ளிகள் வரவழைக்கப்பட்டு அவ்வேலை வேறு ஒருவருக்கு ஒப்புதல் கொடுக்கப்பட்டது.

திரு. என். டென்னிஸ் : பல வேலைகளுக்கு போட்ட எஸ்டிமேட் குறைவாக இருப்பதால் வேலையில் காலதாமதம் ஏற்படுகிறது. வேலையில் காலதாமதம் ஏற்படாமலிருக்க வேலைக்கு ஏற்ற முறையில் எஸ்டிமேட் ரேட் நிர்ணயம் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா என்று அறியவிரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூலக் கேள்விக் கும் இதற்கும் தொடர்பு இருப்பதாகத் தெரியவில்லை. மூலக் கேள்வி ஒப்பந்தக்காரர்கள் ஒப்பந்தங்களைத் திரும்ப ஒப்படைத்து விட்டனரா என்பதுதான். அந்த ஒப்பந்தக்காரர் தேர்தலில் போட்டியிட்டதால் ஒப்பந்தம் ரத்துசெய்யப்பட்டது என்று பதில் சொல்லியிருக்கிறேன். மேற்கொண்டு விவரங்கள் இபபொழுது இல்லை.

செங்காளிபாளையம் பள்ளத்தின் குறுக்கே பாலம்.

* 244 வினு—திரு. ஏ. சுப்பிரமணியம் : மாண்புமிகு பொதுப் பணித்துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோவை மாவட்டத்திலுள்ள சர்க்கார் சாமக்குளம் பிர்க்காவில், குடியலூர், கோவில்பாளையம் சாலையிலுள்ள செங் காளிபாளையம் பள்ளத்தில் பாலம் கட்ட வேண்டுமென்று அரசுக்குக் கோரிக்கை ஏதேனும் வந்துள்ளதா ?

(இ) ஆம் எனில், அதன் பேரில் எடுக்கப்பட்டுள்ள நட வடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா (அ) இல்லை.

(இ) இவ்வினு எழவில்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, இதுசம்பந்தமாக நானே அரசாங்கத்திற்கு விண்ணப்பம் கொடுத்திருக்கிறேன். நேரடியாகவும் பேசியிருக்கிறேன். அரசாங்க அதிகாரிகள் கீழ்

மட்டத்திலே இன்னும் தாமதம் செய்வதாகத் தெரிகிறது. அதைத் துரிதப்படுத்தி நடவடிக்கை எடுப்பதற்கு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : செங்காளி பாளையம் பள்ளத்தின் குறுக்கே பாலம் கட்ட முடிவுசெய்யப்பட்டு ஒரு லட்சம் ரூபாயில் முடிப்பதாக முடிவு செய்யப்பட்டிருக்கிறது. அதிகாரிகள் மட்டத்தில் காலதாமதம் ஏற்படவில்லை. எந்த ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்க வேண்டுமென்பதில் கால தாமதம் ஏற்பட்டது. இந்த ஆண்டு பரிசீலிக்க நடவடிக்கை எடுப்பதற்கான செயற்குறிப்பு இருக்கிறது.

Linking of Cauvery, Krishna and Godavari rivers

* 245 Q.—THIRU A. SUBRAMANIAM : Will the Hon. the Minister for Public Works be pleased to state whether it is a fact that the Government has asked the Union Government to study the feasibility of linking the three rivers, Cauvery, Krishna and Godavari ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : இல்லை.

திரு. ஏ. சுப்பிரமணியம் : தலைவர் அவர்களே, காவிரி, கிருஷ்ணா, கோதாவரி மூன்று ஆறுகளையும் இணைப்பதன் மூலமாக தண்ணீர்ப் பற்றுக்குறையைத் தீர்ப்பதற்கு வாய்ப்பு இருக்கும் என்று சொல்லப்படுகிறது. எனவே இது குறித்து இதுவரை யிலும் எதுவும் செய்யாவிட்டாலும் அரசு ஆரம்ப ஆய்வையாவது மேற்கொள்ள இப்பொழுது நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : கங்கை—காவிரி இணைப்பு மத்திய சர்க்காருடைய பரிசீலனையில் இருக்கிறது. நம் முடைய குறிப்பு அதற்கு அனுப்பவில்லை என்றாலும், தமிழ்நாட் டிற்கு வந்திருந்த இரிகேஷன் கமிஷனிடத்திலே நாம் வற்புறுத்திச் சொல்லியிருக்கிறோம். கங்கை—காவிரி இணைப்பின் முதல் கட்ட மாக கிருஷ்ணா காவிரி ஆறுகளை இணைப்பதன்மூலம் நல்ல பலனை அடைய முடியும் என்று சொல்லி இருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பத்திரிகையிலே பார்த்து இருப்பார்கள் என்று நினைக்கிறேன். கேரளாவிலிருந்து சில ஆறுகளை தமிழ் நாட்டுக்கும், மைசூர் மாநிலத்திற்கும் கொண்டுவரமுடியும். அதன் மூலம் செலவுகூடக் குறையும் என்று ஒரு பொறியாளர் கருத்துத் தெரிவித்து இருக்கிறார்கள்.

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, சமீபத்திலே இந்திரா காங்கிரஸ் கட்சி வெளியிட்ட தேர்தல் அறிக்கையிலே வட மாநிலத்திலுள்ள ஆறுகளையும், தென் மாநிலத்திலுள்ள ஆறுகளையும் இணைக்கும் திட்டம் தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி மத்திய அரசாங்கத்திடமிருந்து ஏதாவது கடிதம் அனுப்பியிருக்கிறார்களா என்று அறிய விரும்புகிறேன்.